ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,207 — 1960 සැප්තැම්බර් 30 වැනි සිකුරාදා — 30.9.1960

12,207 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV — உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 49 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்–வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | — | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### 1946 ம் ஆண்டின் 12 ம் இலக்க களியாட்டவரிச் சட்டம்

1946 ம் ஆண்டின் 12 ம் இலக்க களியாட்டவரிச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்படி யாழ்ப்பாண மாவட்டத்து உடுப்பிட்டி கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் நிறைவேற்றிய கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் தாற்பரியப்படி உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுப் பிரசுரிக்கப்படுகிறது.

தீர்மானம்

" இச்சங்கமானது 1946 ம் ஆண்டின் 12 ம் இலக்க களியாட்ட வரிச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்படி, சங்கத்தின் பரிபலான எல்லைகளுக்குள் நடைபெறும் (சட்டத்தில் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கும்) களியாட்டங்களுக்கான பிரவேசக் கட்டணங்கள்மீது இதன் கீழ்க் காட்டப்பட்டிருக்கும் விகிதங்களின்படியான ஒரு வரியை, இத்தீர்மானம் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் திகதியிலிருந்து இத்தால் விதித்துத் திரட்டுகின்றது.

| கட்டணத் தொகை | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| வரித்தொகை நீங்கலாக, பிரவேசக் கட்டணம்— | |
| (அ) 20 சதத்துக்கு குறையாமலும் 50 சதத்துக்கு கூடாமலுமிருப்பின் .. .. | 0 05 |
| (ஆ) 50 சதத்துக்கு கூடுதலாகவும் ரூ. 1 க்கு கூடாமலுமிருப்பின் .. .. | 0 10 |
| (இ) ரூ. 1 க்கு கூடுதலாகவும் ரூ. 1.50 க்கு கூடாமலுமிருப்பின் .. .. | 0 15 |
| (ஈ) ரூ. 1.50 க்கு கூடுதலாகவும் ரூ. 2 க்கு கூடாமலுமிருப்பின் .. .. | 0 20 |
| (உ) ரூ. 2 க்கு கூடுதலாகவும் ரூ. 3 க்கு கூடாமலுமிருப்பின் .. .. | 0 30 |
| (ஊ) ரூ. 3 க்கு கூடுதலாகவும் ரூ. 4 க்கு கூடாமலுமிருப்பின் .. .. | 0 40 |
| (எ) ரூ. 4 க்கு கூடுதலாகவும் ரூ. 5 க்கு கூடாமலுமிருப்பின் .. .. | 0 50 |
| (ஏ) ரூ. 5 க்கு கூடுதலாகவும் ரூ. 10 க்கு கூடாமலுமிருப்பின் .. .. | 1 00 |
| (ஐ) ரூ. 10 க்கு கூடுதலாயிருப்பின்— | |
| (1) முதலாவது ரூ. 10 க்கு .. | 1 00 |
| (2) கூடுதலான ரூ. 5 அல்லது அதற்குக் குறைந்த தொகை ஒவ்வொன்றுக்கும் | 1 00" |

வீ. சீ. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு,
1960 ம் ஆண்டு செப்டம்பர் மீ 12 ந் உ.

9460.

## விளம்பரம்

1960 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்) மாதம் 19 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1960 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்) மாதம் 21 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்) மாதம் 15 ந் திகதி சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மீ 27 ந் உ.

பேர்ணர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.